2022 மார்ச் 21] [பேரவைத் தலைவர்]

சிறுவயதிலேயே இசைப் பயணத்தைத் தொடங்கி, பல மொழிகளில், 25,000–க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். எண்பதாண்டு காலம் பரந்து விரிந்ததான அவரது இசை வாழ்வில் தனது தேனையொத்த குரலால் ஒவ்வொரு இந்தியரின் இதயத்தையும் வருடிச் சென்றுள்ளார். இசைத் துறையில் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக பத்ம பூஷண், தாதா சாகேப் பால்கே, பத்ம விபூஷண், பாரத ரத்னா விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர். 1999–2005 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை நியமன உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இசை ஆர்வலர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இசைக் குயிலுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

21—

சாலை விபத்துகளைக் குறைப்பதற்கான வழிகாட்டுதல்

***2214—திரு. இரா. அருள்:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2022 மார்ச் 21

தமிழகத்தில் ஏற்படும் சாலை விபத்துகளைக் குறைக்க உரிய வழிகாட்டுதல்களை வகுக்க அரசு முன்வருமா?

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதே நான் பல முறை இந்தச் சாலை விபத்துகளைப் பற்றி, அதனுடைய எண்ணிக்கை அதிகரித்து வருவதைப் பற்றிக் கவலையுற்று உரையாற்றியிருக்கின்றேன். ஆகவே, அதை மனதிலே வைத்து, நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், "சாலைகளில் மக்களுக்குப் பாதுகாப்பான பயணத்திற்கு வழிவகை செய்திட வேண்டும்" என்பதை இந்த அரசினுடைய முதன்மையான இலக்காக நாங்கள் அமைத்துக் கொண்டிருக்கின்றோம்.

அதற்காக, என்னுடைய தலைமையில் உயர்மட்டக் குழுக் கூட்டம் ஒன்றினை கடந்த 18–11–2021 அன்று கூட்டி ஆலோசித்து "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காக்கும் 48" (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்ற உயிர் காக்கும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. "சீரான சாலைகள் திட்டம், விபத்தில் சிக்கக்கூடிய அனைவருக்கும் முதல் 48 மணி நேர அவசர உயிர் காக்கக்கூடிய இலவச சிகிச்சை, சாலைப் பாதுகாப்பு ஆணையம், அவசர மருத்துவ சேவைகளுக்கான சட்டம், இன்னுயிர் காப்போம்–உதவி செய்" என்ற 5 அம்சத் திட்டமாக அது இப்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நானே கடந்த 18–12–2021 அன்று மேல்மருவத்தூர் சென்று, "இன்னுயிர் காப்போம்–நம்மைக் காப்போம் 48" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். அன்று முதல் இத்திட்டம் மிகத் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு, மக்களுக்கு சாலைகளில் பாதுகாப்பான பயணங்கள் மேற்கொள்வதற்கான அனைத்துச் சூழல்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்மூலம் விபத்துகளில் சிக்குவோருடைய உயிர் காப்பாற்றப்படுகிறது. 18–12–2021 முதல் 18–3–2022 வரை அரசு மருத்துவமனைகளில் 29 ஆயிரத்து 142 பேரும், தனியார் மருத்துவமனைகளில் 4 ஆயிரத்து 105 பேரும், ஆக மொத்தம் 33 ஆயிரத்து 247 பேர் இந்த "48 மணி நேர இலவச" சிகிச்சையைப் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2022 மார்ச் 21]

அவ்வாறு சிகிச்சை பெற்றிருக்கிறார்கள் என்பதைவிட, 33 ஆயிரம் குடும்பங்கள் இத்திட்டத்தின்மூலம் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டிற்கே முன்னோடியாக விளங்கும் இந்தத் திட்டத்திற்காக இதுவரை 29.56 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்பதையும், இந்தத் திட்டம் மேலும் முழு வீச்சில் செயல்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பையும், சாலை விபத்தில் ஒருவர்கூட உயிரிழக்கக் கூடாது என்பதையும் உறுதி செய்யக்கூடிய உயரிய நோக்கத்தோடு, அரசு இனி வரும் காலங்களிலும் தீவிரமாகச் செயல்படும் என்ற விளக்கத்தினையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக அளிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருடைய பதிலுரைக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறோம். சாலை விபத்துகளைக் குறைப்பதற்காக எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாங்கள் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். அதேநேரத்தில், விபத்தில் சிக்கி காயம் அடைந்தவர்களுக்கு உரிய நேரத்திலே சிகிச்சை அளிக்கப்பட்டால் அவர்களையும் காப்பாற்றக்கூடிய ஒரு நிலை ஏற்படும். அந்தவகையில் விபத்தில் சிக்கி காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக சிகிச்சை கிடைக்கின்றவகையில் மருத்துவமனையில் சேர்த்து உதவி செய்திட, நல் உள்ளங்களை, தன்னார்வலர்களை ஊக்குவிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலை விபத்தில் சிக்கிய நபர்களை உடனடியாக,* Golden Hour*–க்குள் மருத்துவமனைக்குள்*

கொண்டுவந்து சேர்த்து, உயிரைக் காக்கக்கூடிய மனிதநேயப் பண்போடு பணியாற்றும் நல்ல உள்ளங்களுக்கு நற்கருணை வீரன் என்ற நற்சான்றிதழும், 5 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

தடுப்பணை

***6889—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், பொறையார் பகுதியில் ஒழுகைமங்கலம் அருகில் உப்பனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் நல்ல விவரமாகக் கேள்வி கேட்டிருக்கிறார். பூம்புகார் தொகுதியில் செம்பனார்கோவில் ஒன்றியத்தில் பொறையார் பகுதியில் ஒழுகைமங்கலம் அருகில் உப்பனாற்றின் அருகில் கடல் தண்ணீர் உட்புகாமல் தடுக்க உப்பனாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுமா என்பது கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி ஆற்றின் படுகையில் பாசன அமைப்புகளை விரிவுபடுத்துதல், புனரமைத்தல், நவீனப்படுத்துதல் என்ற திட்டத்தின்கீழ் சிப்பம் 3–ல், சுமார் 93.7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதியிலிருந்து உப்பனாற்றில் கடல்நீர் உட்புகாமல் தடுப்பதற்காக கடைமடை நீரொழுங்கி கட்டும் பணிக்கு ரூ.9.73 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*